பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

இரவு வேளையில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள் எடுப்பவர்களுக்கு இலவச தங்குமிட வசதி வழங்கப்படும்.

மிதுசா கொமினிக்கேசன்ஸ்
முதலாவது மாடி,
புதிய பஸ் நிலையம், வவுனியா.
தொலைபேசி: 024 { 2033 2053

# உதயன்

விலை ரூபா 5-00

மிதுசா கொமினிக்கேசன்ஸ்
உள்ளூர் / வெளியூர் தொலைத் தொடர்பு
FAX சேவை
★ 24 மணித்தியால சேவை ★
58, 59, முதலாவது மாடி,
புதிய பஸ் நிலையம்,
வவுனியா.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 10 வெள்ளிக்கிழமை (24-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 58

# பாரிய தாக்குதல் நடந்தால் சமாதானக் கதவு மூடப்படும்

## யாழ். வந்த தூதுக்குழுவிடம் புலிகள் தலைவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 24

இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு நாம் என்றும் தயாராகவே உள்ளோம். சமாதானக் கதவுகளை எப்போதும் திறந்தே வைத்துள்ளோம்.

ஆனால் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்து வருவது போல, பாரிய இராணுவ நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுமானால், மக்களுக்குப் பெரும் இழப்பு ஏற்படுமானால் சமாதானக் கதவுகள் மூடப்படும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் தலைவர்கள் தம்மை நேற்றுச் சந்தித்துப் பேசிய கத்தோலிக்க நல்லெண்ணத் தூதுக்குழுவிடம் தெரிவித்தனர்.

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள கத்தோலிக்க நல்லெண்ணத் தூதுக்குழுவினர், நேற்று மாலை, விடுதலைப் புலிகள் தலைவர்களைச் சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது விடுதலைப் புலிகள் தலைவர்கள் தமது நிலைப்பாட்டைத் தூதுக் குழுவினருக்கு பின்வருமாறு விளக்கினார் என அறியவந்தது:

இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சிக்கும் நாம் எப்போதும் தடையாக இருக்க விரும்பியதில்லை.

சமாதானச் சூழ்நிலையில் பேச்சுக்களை நடத்துவதற்கு நாம் என்றும், பின்நின்றதுமில்லை. எங்களைப் பொறுத்தவரையில் சமாதானக்கதவுகள் திறந்தே உள்ளன.

[3ஆம் பக்கம் பார்க்க]

## குண்டு வெடிப்பு குறித்து நீதிமன்ற விசாரணை

சீனக்குடா விமானத் தளக் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து நீதிமன்ற விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு விமானப் படை கொமாண்டர் விஜிதா தென்னக்கோன் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்தக் குண்டு வெடிப்பு தவறுதலாக இடம்பெற்ற சம்பவம் என்று இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதாகவும் அவர் சொன்னார்.

இந்தச் சம்பவத்தில் ஆயுதக் களஞ்சியம் முற்றாக சேதமடைந்துள்ளது. மொத்தம் ஒன்பது விமானங்கள் சேதமடைந்தன. அவற்றில் ஒன்று முழு அளவில் சேதம் அடைந்தது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [ஓ-எ]

## சீனக்குடா குண்டுவெடிப்பு தற்செயலான சம்பவமாம்

### சபையில் பிரதமர் தெரிவிப்பு

திருகோணமலை சீனக்குடா விமானத்தளத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவம் பயங்கரவாதச் செயல்களால் ஏற்பட்டதல்ல; தற்செயலாக ஏற்பட்டதாகும்.

பிரதமரும் நிதி அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்கா நாடாளுமன்றத்தில் நேற்று இத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் நான் நேரடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்டேன்.

அக்குண்டு வெடிப்புச் சம்பவம் காரணமாக 9 பேர் உயிரிழந்தனர், 15 பேரைக் காணவில்லை, 14 பேர் கடுமையான காயங்களுக்குள்ளானார்கள், மேலும் 120 பேர் சிறுகாயங்களுக்குள்ளானார்கள். விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன - இப்படி பிரதமர் சொன்னார். [த-எ]

## வவுனியாப் பகுதிகளில் அகோரக் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், ஜன. 24

வவுனியாவில் ஈச்சங்குளம், கட்டையர் குளம் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை இரு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

சுமார் ஒரு மணி நேரம் தொடர்ச்சியாக நடந்த இந்தத் தாக்குதல்களினால் பொதுமக்களின் வீடுகள் பல சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டுவீச்சை அடுத்து ஈச்சங்குளம் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பருத்தித்துறை கடலில் சூடு! மீனவர்கள் மூவர் தப்பினர்!!

பருத்தித்துறை கடற்பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 10-30 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா படையினர் கலிபர் தாக்குதலை நடத்தினர்.

அச்சமயம் மூன்று மீனவர்கள் கடலில் பாய்ந்து தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களை சக மீனவரான வ. அருள்தாஸ் என்பவர் மீட்டு வந்தார். சம்பந்தப்பட்டவர்களது படகும் மீட்கப்பட்டது.

ம. அந்தோனிப்பிள்ளை, அ. அரவிந்தன், தங்கராசா சிறி ஆகியோரே மயிரிழையில் உயிர் தப்பியவர்கள் ஆவர். (ஓ-165)

### யாழ் மருத்துவபீட இடமாற்றம்

## மூதவையும் பேரவையும் ஒப்புதல் அளிக்க மறுப்பு

யாழ்ப்பாணம் ஜன. 24

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை வெளியே இடமாற்றும் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று யாழ். பல்கலைக்கழக மூதவை, மேலவை ஆகியன பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளன.

மேற்படி இரண்டு சபைகளினதும் கூட்டங்கள் தனித்தனியாக நடைபெற்ற சமயம் இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை வெளியே மாற்ற வேண்டும் என்ற பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் சிபார்சு சகல பிரிவினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்றும்—

இந்தத் திட்டம் எவராலும் ஏற்கப்படக்கூடிய விடயம் அல்ல என்றும்— அந்த சபைகள் நிறைவேற்றிய தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச திட்டம் கைவிடப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஹமீத் தெரிவித்தபோதிலும், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அந்த முடிவை இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [அ-3]

## பூஸா தமிழ் இளைஞர்கள் பள்ளேகலவுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜன. 24

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் பள்ளேகலவுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான தீர்மானம் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற உயர் மாநாடு ஒன்றில் எடுக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களை அவர்களது பெற்றோர் சென்று பார்வையிடுவதற்கு வசதியாகவே இந்த இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. [த-எ]

## 22 நாட்களில் 19 தாக்குதல்கள் 107 படையினர் இம்மாதம் பலி

இந்த வருடத்தின் முதலாவது மாதத்தின் 22 நாட்களில் மட்டும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் மொத்தம் 107 படையினர் கொலையுண்டுள்ளதாகப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி மட்டக்களப்பு சந்திவெளித் திடலில் நடந்த தாக்குதல் முதல் 22 ஆம் திகதி வவுனியாவில் மாமடு, கணேசபுரம் ஆகிய இடங்களில் நடந்த தாககுதல் வரை 107 படையினர் உயிரிழந்தனர்.

இந்த 22 நாட்களிலும் விடுதலைப் புலிகள் மொத்தம் பத்தொன்பது தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அவற்றில் மொத்தம் பதின்மூன்று போராளிகளே வீரமரணம் அடைந்துள்ளனர்.

19 தாக்குதல்களின்போது எழுபதுக்கும் மேற்பட்ட ஆர். பி. ஜி, ஏ. கே. எல். எம். ஜி, ரி 81 ஆகிய நவீன ஆயுதங்களையும் மற்றும் ஏராளமான ஆயுதத் தளபாடங்களையும் புலிகள் கைப்பற்றி உள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வெளியிட்ட மதிப்பீட்டு அட்டவணையிலிருந்து இந்த விவரங்கள் தெரியவந்துள்ளன. [அ]

## அமெ. இராணுவ அதிகாரிகள் இந்தியா விஜயம்

லண்டன், ஜன. 24

அமெரிக்க இராணுவத்தின் உயர் அதிகாரிகள் இருவர் இந்தியா சென்றுள்ளனர்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான இராணுவத் தொடர்புகளை அபிவிருத்தி செய்யும் முயற்சியின் ஒரு கட்டமாகவே இவர்களின் விஜயம் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-5]

### முச்சந்தி முரளி



அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்துகிற கதைதான் போல!...... அகதிகள் விஷயம்......

## சென்னையில் அமெரிக்க யுத்தக் கப்பல்

சென்னை, ஜன. 24

அமெரிக்கப் போர்க் கப்பல் ஒன்று நல்லெண்ண விஜயமாக கடந்த வாரம் சென்னைத் துறைமுகத்தை சென்றடைந்தது என்று அறிவிக்கப்பட்டது. [இ-எ]

## தோட்டப் பகுதிகளிலும் விடுதலைபுலிகள் ஊடுருவல்

### சபையில் அமைச்சர் வின்சென்ட்

கொழும்பு, ஜன. 24

விடுதலைப் புலிகள் ஊவா மாகாணத்தில் செயல்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தோட்டப் பகுதிகளிலும் ஊடுருவி இருப்பதையே இது காட்டுகின்றது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணையை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுகையில் அமைச்சர் வின்சென்ட் [illegible] கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:-

எல்ல பொலீஸ் பகுதியில் நடைபெற்ற கொலை மற்றும் கொள்ளைச் சம்பவம் இதனை உறுதி செய்கின்றது.

தோட்டப் பகுதிகளில் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்தை எதிர்க்கும் தீவிரவாதிகள் வடக்கு - கிழக்கில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் நகர்ந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. [illegible] காலியிலும் [illegible] யாவிலும் கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து ஆயுதங்களும் சன்னங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதிலிருந்து தென்னிலங்கையிலும் அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்து வருகிறது என்பது தெளிவாகின்றது.

நாடு முழுவதிலும் சமாதானத்தை நிலைநாட்ட அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. எனவே அவசரகாலச் சட்ட விதிகளை மேலும் நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

இப்படி அமைச்சர் வின்சென்ட் பெரேரா சொன்னார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பொன்னாலையில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 24

காரைநகர் படையினர் நேற்று முன் தினம் இரவு 9-30 மணியளவில் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இதனால் வீடுகள் மற்றும் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## இராணுவ நடவடிக்கை பின்போடப்படுமா?

கொழும்பு, ஜன. 24

யாழ். குடா நாடு மீதான பாரிய இராணுவ நடவடிக்கை பின்போடப்படலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்களில் பேச்சு அடிபடுவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

சீனக்குடா விமானத் தளத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## அகதிகளுடனான அடுத்த கப்பல் 29இல் வருகிறது

தமிழகத்தில் இருந்து இரண்டாவது தொகுதி - இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றி வரும் கப்பல் இம்மாதம் 29ஆம் திகதி திருகோணமலை சீனக்குடாத் துறைமுகத்தை வந்தடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு துணை அமைச்சுச் செயலாளர் டாக்டர் ராஜா சமரசேகரா நேற்று செய்தியாளரிடம் இத் தகவலை வெளியிட்டார்.

750 இலங்கைத் தமிழ் அகதிகளுடன் இரண்டாவது கப்பல் இம்மாதம் 27ஆம் திகதி சென்னைத் துறைமுகத்தில் இருந்து புறப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## ஆள் கடத்தலை விசாரிக்க மற்றும் ஓர் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 24

ஆள் கடத்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஜனாதிபதி பிரேமதாஸா மற்றும் ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்துள்ளார்.

இந்த ஆணைக்குழு 11-01-1992இலிருந்து அடுத்து வரும் பன்னிரண்டு மாத காலப் பகுதியில் நாட்டில் ஆட்கள் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்படுவது பற்றிய முறைப்பாடுகளை விசாரிக்கும். இந்த ஆணைக்குழுவின் தலைவராக திரு. எச். ஏ. டி. சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஜனாப். ஏ. சி. எம். உவைஸ், திரு. கே. விக்னராஜா, திரு. பி. ஈ. டி. சில்வா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் செயலாளராக திரு. சி. எல். ரீ. மூனமலே நியமிக்கப்பட்டிருக்கிறார். [இ-எ]

## குருநகர் மீனவர் சிக்கினார்!

குருநகர், ஜன. 24

பூநகரி, ஆனைவிழுந்தான் தீவில் கடந்த செவ்வாய் அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களில் ஒருவர் ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டார். அவருடன் தொழில் செய்து கொண்டிருந்த மற்றொருவர் தப்பி வந்து விட்டார்.

குருநகரைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான குலசிங்கம் கன்யூஸ் [34வயது] என்பவரே இராணுவத்திடம் சிக்கியவர் ஆவர். [ஓ-51]

### ஒற்றுமை யாத்திரையால்

## இந்து - முஸ்லிம் கலவரம் மூளலாம் என அச்சம்

புதுடில்லி, ஜன. 24

இந்தியக் குடியரசு தினமான எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்து — முஸ்லிம் கலவரம் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரதீய ஜனதாக் கட்சி கன்னியாகுமரியில் ஆரம்பித்த ஒற்றுமை யாத்திரை குடியரசு தினமன்று காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரைச் சென்றடைய உள்ளது. அன்றைய தினம் பாரதீய ஜனதா தொண்டர்கள் ஸ்ரீநகரில் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றப்போவதாக அறிவித்துள்ளனர்.

இந்தியத் தேசியக் கொடியை ஏற்றுபவர்களை கொல்லும்படி காஷ்மீர் முஸ்லிம் தீவிரவாதிகள் அப்பகுதி மக்களைக் கோரியுள்ளனர்.

இதேவேளை, தேசியக் கொடியை ஏற்றும் பாரதீய ஜனதா தொண்டர்களை தாக்குவதற்கு ரொக்கெட்டுகள் மற்றும் ஆயுதங்களுடன் காஷ்மீர் தீவிரவாதிகள் தயாராக இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பாரதிய ஜனதா கட்சியை எச்சரித்துள்ளார். [இ-எ]

## படையினர் ஷெல் தாக்குதல்

மண்டைதீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று இரவு யாழ்ப்பாண கரையோரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தினர். யாழ்ப்பாணம் பழைய பொலீஸ் நிலையம் பண்ணைப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [இ-51-15]

## இ. தொ. கா. எம். பி. மறுப்பு

மலையகத் தமிழருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு கிடையாது.

இ. தொ. காவின் எம். பி. திரு. சென்னன் நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் திரு. சென்னன் கலந்து கொண்டு பேசினார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

450 முட்டை அடைவைக்கக்கூடிய [Incubator] கருவி விற்பனைக்கு. விலை ரூபா 4200/- நூற்றிஐம்பது முட்டை வீதம் பிரித்தும் வைக்கலாம்- மண்ணெண்ணெய்க்கும் இலகுவாக மாற்றலாம். கனகா ரேடேர்ஸ், பேப்பர் கடை, திருநெல்வேலிச்சந்தி.
(19444)

நல்ல இன (Komouri X Jamnapari) பால் ஆடு, 10 நாள் ஆண்குட்டி, ஒரு போத்தல் பால் தற்சமயம். விவரம்: இராசசிங்கம், தயாற்சுந்தோர் ஒழுங்கை, உரும்பராய்.
[19442]

### தேவை

சிறுவர் பாடசாலைக்குரிய மேசை, கதிரை மற்றும் உபகரணங்கள் தொடர்பு: செயலாளர், ஆலய பரிபாலன சபை - அருள்மிகு வாலாம்பிகா சமேத விஸ்வலிங்க வைத்தீஸ்வர சுவாமி திருக்கோயில், கே. கே. எஸ். வீதி, திருவண்ணைநகர், யாழ்ப்பாணம்.
[19443[

### மணமகள் தேவை

தற்போது விடுமுறையில் நிற்கும் மணமகன் வயது 34 பிரான்சில் 14 வருடங்களாக தொழில் புரிபவர். நட்சத்திரம் ரோகிணி, கிரகபாவம் 4 செவ்வாய் பாவம் 8 ஜாதகம், படத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: A. C. மகேந்திரன், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
[19437]

### மணப்பெண் தேவை

தனியார் துறையைச் சேர்ந்த நல்ல வருவாயுள்ள 36 வயதுச் செவ்வாய்க் குற்றமற்ற கிரகபாவம் குறைந்த ஜாதகருக்கு,யாழ்நகர் அணித்தாகச் சைவப் பண்புள்ள குடும்பத்து 31 வயதுக்குக் குறைந்த அழகிய மணப்பெண் தேவை. ப. சோமசுந்தரம், 122, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி. [19432]

### காணவில்லை

எனது மகளிர் துவிச்சக்கர வண்டி (Asia Bike) இல. 0107033— 21-1-92 மாலை எனது கடைக்கு முன்னால் காணாமல் போய்விட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து நெல்லியடி சந்தியிலுள்ள கடையில் ஒப்படைத்து தகுந்த சன்மானம் பெற்றுக் கொள்ளவும். ப. மகேஸ்வரி, உரிமையாளர் லியேட்டி மோட்டேர்ஸ், நெல்லியடிச் சந்தி. [19448]

### புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/1186)

### மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்கு கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதர் மாணவர் அகராதி' ரூபா 95/-. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன் துறை சாலை, யாழ்ப்பாணம்.
[சி-1409]

### கணிதம்

ஆசிரியர் 'சச்சிதானந்தனின் ஆக்கங்களான ''கணிதம் உதவி நூல் வரிசைகள்'' விற்பனையாகின்றன. மடக்கை, விருத்திகள், திரிகோணகணிதம், புள்ளிவிபரவியல் ஒவ்வொன்றிலும் பயிற்சி வினாக்களும், செய்கைகளும் அடங்கியவை. ரூபா 20/-. பூபாலசிங்கம் மற்றும் புத்தகசாலைகளில்.
[4486]

### அச்சு வேலைகள்

திருமணம், பிறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய விடை அளிக்கப்படும். ஜாதகம், குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர்.
[19420]

Personal
**New Science Centre**
எழிலகம் முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
**இரசாயனவியல்**
திரு. செல்வா B. Sc. (Hons
★ புவி வளம் ★
ஆரம்பம்; 25-1-1992 சனிக்கிழமை 4-30 p.m.
**A/L - MATHS**
திரு. குணசிங்கம் B. Sc. (Hons)
நேர அட்டவணை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
(சி, 1420)

**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்.
**A/L - 93**
கேள்விக் கோட்பாடு
ஆரம்பம்:
25—01—1992 (சனி) 4—00 மணி
**A/L - 93**
3ஆவது பிரிவு
ஆரம்பம்: 5—00 மணி
ஆசிரியர்: உதயன்
[சி-1418]

**கீன் கல்வி நிலையம்**
திருநெல்வேலி.
**A/L 92**
பொருளியல் - எஸ். வரதராஜன்
சனி, ஞாயிறு
8-00 - தேசியவருமானம்
12 00 - சென்மதிநிலுவை
**ஆரம்பம்:- 25 - 01 - 92**
★ குறிப்பு: இரண்டு பிரிவுகளுக்கும் ஒரு கட்டணமே அறவிடப்படும்.
[சி-1411]

அரசாங்க
**எழுதுவினைஞர் பரீட்சை**
பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான
**துரித பயிற்சி வகுப்புகள்**
**10** தினங்கள் மட்டும்.
★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ நாளாந்தக் கட்டணம் ரூபா 20 மட்டுமே
**ஆரம்பம்: 25-01-1992**
முற்பகல் 10 30
பாடநெறி:- மொழித்தேர்ச்சி, உளச்சார்பு.
போட்டியில் வெற்றி பெற
ஓர் அரிய சந்தர்ப்பம்!
**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
[சி-1414]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 31 — 1 — 1900
மறைவு: 25 — 12 — 1991

**அமரர் த. நன்னித்தம்பி**
(பொன்னுத்துரை)
திதி: 24-1 1992

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பேரன்பிற்கு உரிய எம் தெய்வமே! ஐயா! அன்புத் தந்தையே! உங்கள் 60 ஆம் ஆண்டு இல்வாழ்க்கையை எய்தும் இத்தருணத்தில் ஏன் எம்மை விட்டுச் சென்றீர்கள் ஐயா! உங்கள் பிரிவை ஜீரணிக்க முடியாது ஏங்கித் தவிக்கிறோம். நீங்கள் எங்களை விட்டுச் சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு என்றும் அகலாதல்லவோ!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.
[19447]

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**வேலாயுதம் செல்வராசா**

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் பங்கு பற்றியோருக்கும், உதவி புரிந்தோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இன்று [24-1-92] வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்புக் கணவர், சகோதரர்கள்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பயிற்றோலை,
அச்சுவேலி.
[19441]


## மாகாணசபை நிதி வீண் விரயம்

கொழும்பு, ஜன. 24 நாட்டிலுள்ள 8 மாகாண சபைகளில் 7 மாகாண சபைகள் 1988ஆம் ஆண்டில் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வீண் விரயம் செய்தன என்று கணக்காய்வாளர் நாயகம் திரு. காமினி யாப்பா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது (த)

## கருத்தரங்கு

நல்லூர் அரிமாக் கழகம் நடத்தும் சலரோகம் சம்பந்தமான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு அரியாலை ஆனந்தா தமிழ் கலவன் வித்தியாலயத்தில் நடைபெறும். [த -10]


# ஓர் அபூர்வ கலைஞனின் நினைவாக

நாதஸ்வர வித்துவான் அமரர் என் ஆர். கோவிந்தசாமி அவர்களின் நான்காவது சிரார்த்ததினம் இன்றாகும்.

நாதஸ்வரக் கலை இந்த உலகில் வாழும் வரைக்கும் அமரர் என். ஆர். கோவிந்தசாமி அவர்கள் நினைவு கூரப்படவேண்டிய தனித்துவம் வாய்ந்த கலைஞராவார். மல்லாரி, பல்லவி, ஸ்வரப்பிரஸ்தாரம் எனப்படும் கற்பனாஸ்வரம் ஆகியவற்றை அதிதுரித காலத்தில் வாசிக்கும் தனித்திறமை பெற்றிருந்தவர் கோவிந்தசாமி அவர்கள். ''மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது'' என்பது போல் எத்துணை வாயுவேகம், மனோவேகத்தில் வாசித்தாலும் இம்மியளவாவது சுருதியோ, லயமோ, பிசகாது வாசித்து வந்தவர் அவர்.

நாதஸ்வரக் கலை வழங்கும் திராவிடப் பிரதேசங்களான தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கர்நாடகம் இவற்றுடன் ஈழத்தையும் ஒருசேர நோக்கும் பொழுது, இவ்வாறு அதிதுரித காலத்தில் பல்லவியோ, மல்லாரியோ, கற்பனாஸ்வரமோ வாசிக்கும் திறமை பெற்றிருந்தவர்களோ, பெற்றிருப்பவர்களோ, மிக மிகச் சிலரே. அதே போல் இவருக்கு ஈடாகத் தவில் வாசிக்கும் திறமை பெற்றிருந்தவர்களும், திறமை பெற்றிருப்பவர்களும் மிக மிகச் சிலரே.



அமரர் என். ஆர். கோவிந்தசாமி

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ''ஈழத்துச் சிதம்பரம்'' என அழைக்கப்படும் காரைநகர்ச் சிவன்கோயிலில், சுருட்டி இராகத்தில் இவர் வாசித்த பல்லவியும், அதற்கேற்ப தவில் வாசித்த மேதை தட்சணாமூர்த்தியின் லய ஒத்திசைவும் இன்னமும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இந்த ஒலிப்பதிவு நாடா ஒருவரிடம் இன்னமும் பாதுகாப்பாக உள்ளது.

1969 ஆம் ஆண்டு பருத்தித்துறைச் சிவன் கோவில் தேர்த் திருவிழாவுக்கு, யாழ்ப்பாணத்தில் அன்று பெயர் பெற்று விளங்கிய

நவாலியூர்
நா. சச்சிதானந்தன்

அத்தனை நாதஸ்வர வித்துவான்களும், தவில் வித்துவான்களும் சேர்ந்து மல்லாரி வாசித்தார்கள்.

விளம்பகாலம், மத்திமகாலம், துரிதகாலம் ஆகிய மூன்று காலங்களிலும் இடையீடின்றித் தொடர்ச்சியாக வாசிக்கப்பட வேண்டிய மல்லாரி. துரித காலத்துக்கு வந்ததும் இரண்டு ஆவர்த்தனம் பூர்த்தியாகு முன்பே வேகத்தை அதிதுரித காலத்துக்கு மாற்றினார் கோவிந்தசாமி. சேர்ந்து வாசித்த சிலருக்கு இப்பொழுது லயம் இடக்காக நின்றது. மல்லாரியில் இடையீடு ஏற்பட்டு, மீண்டும் விளம்ப காலத்திலிருந்து மல்லாரி தொடங்குகிறது. படிப்படியாகத் துரிதகாலத்துக்கு வந்ததும் மீண்டும் இடக்கு ஏற்படுகிறது. மீண்டும் அகரத்திலிருந்து மல்லாரி ஆரம்பமாகிறது மீண்டும் தடங்கல் போதாதற்கு இப்பொழுது தாளக்காரரின் இடக்கு இவ்வாறு நான்காவது முறையாகத் துரித காலத்துக்கு வருவதற்குள் அநேகமாக எல்லோருடைய கைகளும் சோர்ந்து, மெய் சோர்ந்து, வியர்த்து, விறுவிறுத்து நிற்கின்றனர்.

இதில் மேலும் நின்றால் விடிலங்கம் என நினைத்தோ, என்னவோ சிலர் மெதுவாக நழுவுகின்றனர். சரி, மல்லாரியை அவ்வளவில் பூர்த்தி செய்து விடுவோமெனக் கோவிந்தசாமி அவர்கள் எத்தனித்த போது, விழா உபயகாரர் உட்பட, பல மக்கள் விடவில்லை. மல்லாரி மூன்று காலமும் பிசகின்றி வாசித்துப் பூர்த்தியான பின்புதான் சுவாமி தேரில் ஆரோகணிப்பார் என உபயகாரர் அறிவிக்கிறார்.

இப்பொழுது கோவிந்தசாமி அவர்களின் சிறிய தந்தை அங்கப்பா அவர்களும், கோவிந்தசாமி அவர்களுமே எஞ்சி நிற்கின்றனர். தவில் வித்துவான்களில் மேதை தட்சணாமூர்த்தி அவர்களும் நாச்சிமார்கோவிலடி கணேசன் அவர்களும், சின்னராசா அவர்களுமே எஞ்சி நிற்கின்றனர். ''சித்தப்பா தாளம் போடுங்கோ'' என்று கோவிந்தசாமி அவர்கள் கேட்டுக் கொண்டதும் தனது நாதஸ்வரத்தைக் கையளித்து விட்டுத் தாளக்காரராக மாறிவிட்டார் நாதஸ்வர வித்துவான் அங்கப்பா அவர்கள்.

கோவிந்தசாமி அவர்கள் தனியாக மல்லாரி வாசிக்க, மூன்று தவில் வித்துவான்களின் அனுசரணையுடன் மல்லாரி பொங்கி மலர்கிறது.

### பாணந்துறையில் சிங்களவர் சுவைத்த பைரவி ராகம்

1972ஆம் ஆண்டு பாணந்துறைக் கந்தசுவாமி கோவிலில் கோவிந்தசாமி அவர்களும் பி. எஸ். ஆறுமுகம் பிள்ளை அவர்களும் இணைந்து பைரவி இராகமும் பல்லவியும் வாசித்தனர். ஆறு மணித்தியாலங்கள் வரை நிகழ்ந்த இந்த இன்னிசையை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் காலி வீதியில் அமர்ந்திருந்து சுவைத்த காட்சி இன்னமும் கண்முன் நிற்கிறது.

பல்லவியில் இரு வித்துவான்களும் மாறி, மாறி புதிய கற்பனா வடிவங்களைப் புகுத்தி வாசித்த போது மக்கள் இசை விளங்காவிடினும் பரவசத்துடன் சுவைத்தனர் என்பது அவர்களின் முகங்களில் தெரிந்தது. கோவிந்தசாமி அவர்களின் வக்ரஸ்வரப் பிரயோகங்களைக் கேட்டு அதிசயித்த ஆறுமுகம் பிள்ளை அவர்கள் ''தம்பியிடம் இவ்வளவு சரக்கு இருக்கென்று இப்பதானே தெரியுது'' என்று பகிரங்கமாகப் பாராட்டினார்.

1980ஆம் ஆண்டு வரெழு அம்மன் கோவிலில் இந்தியாவிலிருந்து வந்திருந்த நாதஸ்வர வித்துவான் சாத்தனூர் கணேசன் அவர்களும், கோவிந்தசாமி அவர்களும் இணைந்து வாசித்தனர். விடாக்கண்டனாகிய சாத்தனூர் கணேசன் பல்வேறு இசை அம்சங்களையும் சரமாரியாகப் பொழிந்து தள்ளினார்.

கோவிந்தசாமியின் முறை வந்ததும் அவர் கோகிலப்பிரியா இராகம் வாசித்து அதில் பல்லவி ஒன்று வாசித்தார். இந்த இராகம் சண்முகப்பிரியா இராகத்தின் அம்சத்தையும், தோடி இராகத்தின் அம்சத்தையும் கொண்டது.

கோவிந்தசாமி அவர்களின் அசுரவேகத்துக்கும், வக்ரஸ்வரப் பிரயோகங்களுக்கும் சாத்தனூர் கணேசன் அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை.

ஈற்றில் நிகழ்ச்சி முடிந்ததும் கோவிந்தசாமி அவர்களைக் கட்டித் தழுவிய கணேசன் அவர்கள் ''நான் மாட்டு வண்டி போனாலும் வாசிப்பேன்; விமானமாகவும் பறப்பேன். என்னுடன் ஈடு கொடுத்து இதுவரை ஒருவரும் வாசிக்கவில்லை. சிலர் என்னுடன் வாசிக்க வரமாட்டார்கள். சிலர் என்னுடைய வழிக்கு வர மாட்டார்கள். ஆனால் ஈழத்தில் ஒரேயொரு கலைஞனான நீங்கள் என்னுடைய வழிக்கும் வந்து வாசித்து அதே நேரத்தில் உங்களுடைய வழிக்கு நான் வரமுடியாதவாறு வாசிக்கிறீர்கள் என்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்.

இந்த நிகழ்ச்சிகளெல்லாம் இசையுலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறித்து வைக்கப்பட வேண்டியவை.

நெருசிருக்கும் வரை இந்த அபூர்வ கலைஞனின் நினைவிருக்கும்.

[விளம்பர இல. (சி-1342)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## மருட்டல் நாடகம்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழுவில் அங்கம் வகிக்கும் தேசங்களின் கொழும்புத் தூதுவர்கள் வவுனியாவுக்கு வந்து சென்றிருக்கிறார்கள்.

தமிழ் மாவட்டமான வவுனியாவில் அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் சீராக நடைபெறுகிறது. தமிழ் மக்கள் கஷ்டமில்லாமல் வாழ்கிறார்கள். அவர்களுக்குரிய தேவைகள் எல்லாவற்றையும் அரசாங்கம் செய்து கொடுக்கிறது. தாதுவர்களின் நாடுகள் வழங்கும் நிதி உதவியில் இருந்து வவுனியாவும் அபிவிருத்தி செய்யப்படுகிறது — இவற்றைத் தூதுவர்களுக்குச் செயற்கையாகச் செய்துகாட்டிப் புள்ளி வாங்குவதே இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டதன் நோக்கமாகும்!

அடுத்த மாதம் ஏழாம், எட்டாம் திகதிகளில் பாரிஸில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் நடைபெற உள்ளது. அங்கே சென்று பிச்சை கேட்பதற்காக பிச்சாபாத்திரத்தை துப்புரவு செய்யும் வேலைகள் தொடங்கியுள்ளன. பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்கா தலைமையில் செல்லவிருக்கும் உயர் அதிகாரிகள் குழுவில் ஒரு தமிழரும் முக்கிய இடம்பெறுகிறார்.

உலக வங்கிக்குப் பரிபூரண அடிமையாக மாறி, அது போட்ட நிபந்தனைகள், இட்ட கட்டளைகள் எல்லாவற்றையும் கைகூப்பி, சிரந்தாழ்த்தி ஏற்றுக்கொண்டதால் என்றுமில்லாதவாறு சென்ற ஆண்டில் நாறுகோடி டாலர் உதவி கொழும்பு அரசுக்குக் கிடைத்தது.

அது போலவே, மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று ஒரு நிபந்தனையை பெயருக்குப் போட்டுக்கொண்டு, உதவி வழங்கும் நாடுகளும் பெருந்தொகைக் கடனைக் கடந்த வருடத்தில் வழங்கியிருந்தன.

இடைப்பட்ட காலத்தில், இராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டும், வடக்கு-கிழக்கில் அமைதி ஏற்படக் கூடியதாக தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகளில் பலவும் தனித்தனியாக நிபந்தனைகள் போடத் தொடங்கின.

இதற்கிடையில் கடந்த வருட இறுதியில் நடக்க இருந்த அந்நாடுகளின் கூட்டமும் எதிர்வரும் பெப்ரவரிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த ஒத்திவைப்பும், தனித்தனியாக எழுந்த நிபந்தனைகளும் கொழும்பு அரசாங்கத்துக்குக் குலைநடுக்கத்தை உண்டாக்கி உள்ளன!

எனினும் அதனை வெளியே காட்டிக்கொள்ளாமல், சாதுரியமாகவும், தந்திரமாகவும் உதவி வழங்கும் நாடுகளுக்குப் "பாய்ச்சா" காட்டிப் பணத்தைப் பெற்றுவிட அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது. உதவி வழங்கும் நாடுகள் விதித்துள்ள, விதிக்க உத்தேசித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் உள்ளார்ந்த மனவிருப்பம் அரசுக்கு அறவே இல்லை. எவ்வாறாயினும் ஆசைவார்த்தையும், பகட்டுப் பேச்சும் செய்து, அந்த நாடுகளை மருட்டிக் குலாவித் தனது பக்கத்துக்கு இழுக்கும் முயற்சிகளில் தன்னாலான வரை அரசு முயன்று வருகிறது.

அந்த மருட்டல் காட்சியின் ஓரங்கமே வெளிநாட்டுத் தூதுவர்கள் வவுனியாவுக்குக் கூட்டிவரப்பட்ட, "ஒழுங்கு செய்யப்பட்ட" விஜயம்!

ஆகையால், உதவி வழங்கும் நாடுகளின் தூதுவர்கள் தமிழ்ப் பகுதிகளின் உண்மை நிலையை அறிய விரும்பினால் அரசினால் ஒழுங்கு செய்யப்பட்ட விஜயங்களைத் தவிர்த்து, தாம் தனித்தனியாக, திடீர் விஜயங்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் அல்லல்களை அவதானிக்க வேண்டும்.

அரசாங்கம் அழைத்து வந்து காட்டும் இடங்களுக்கு மட்டுமன்றி, சகல தமிழ் மாவட்டங்களுக்கும் வந்து மக்களைச் சந்தித்துச் சுயேச்சையான தகவல்களைத் திரட்டி, தமது சொந்தத்தில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதுவே சரியான வழி.

# தமிழருக்குத் தன்னாட்சி வழங்காது நிரந்தர சமாதானம் ஏற்படாது

அரசாங்க சார்பு "சண்டே ஒப்சேர்வர்" பத்திரிகையின் 5-1-1992 ஆம் திகதிய இதழில் — அதன் அரசியல் விமர்சகர் அனுருத்த திலகசிரி எழுதிய கட்டுரையின் பிரதான பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

தொண்டமானின் யோசனைகள் இரண்டு முக்கிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டவையாகத் தெரிகின்றன.

அவற்றில் ஒன்று: — பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் ஆதிக்கமே இனப் பிரச்சினை தோன்றவும் விரிவடையவும் காரணமாகியது. ஆகவே இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு சுயாட்சி அமைப்பு ஒன்றை வழங்குவதே தீர்வாக மட்டும் இருக்க முடியும்.

இரண்டாவது — இன்றைய யுத்தம் வெற்றியடைய முடியாத ஒன்று. ஆகவே விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்பதாகும்.

பிரிட்டிஷார் கடைப்பிடித்த பிரித்தாளும் கொள்கைதான் இனப்பிரச்சினையின் ஆணிவேர் என்றும் அதற்கு உதாரணமாக இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையும் சாதகமாகக் காட்டப்பட்டது. இது விஷயத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பெரிய வித்தியாசம் இருப்

## இராணுவம் யாழ்ப்பாணத்திற்குள் புகுந்தாலும் அங்கு வருடக் கணக்கில் சிக்குண்டு விடும்!

பதை நாம் வசதிக்கேற்ப மறந்து விடுகிறோம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் சுயாட்சியோ, தன்னாட்சியோ கோரவில்லை. எந்த ஒரு தமிழ்த் தலைவரும் சுயாட்சியோ, சுதந்திரமோ கோரி பிரிட்டிஷாரிடம் அன்று பிரதிநிதித்துவம் செய்யவில்லை. (பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் முஸ்லிம்கள் தனி நாடு கோரி வந்தனர்.)

### சமஷ்டிக்கு சம்மதிக்காத தமிழர்கள்

உண்மையில் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கைக்கு சமஷ்டி அரசியலமைப்பு வேண்டும் என்று கோரியபோது, அவருடன் இருந்த தமிழர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை.

மேலும் சிங்களத் தலைவர்கள் குழு ஒன்று, நாட்டில் மூன்று தன்னாட்சிப் பிரிவுகள் — கண்டிச் சிங்களவருக்கு என ஒன்று, கண்டிச் சிங்களவர் அல்லாதோருக்கு என ஒன்று யாழ்ப்பாணத் தமிழருக்கு என ஒன்று அமைக்க வேண்டும் என்று யோசனை கூறியபோது தமிழ்த் தலைவர்களிடமிருந்து மீண்டும் சாதகமான பதில் வரவில்லை.

தன்னாட்சி, தனிநாடு ஏன் அதிகாரப்பரவலாக்கலைக் கூட தமிழர்கள் அன்று விரும்பவில்லை.

சிங்களவர்கள் தமது தமிழர் எதிர்ப்புக் கொள்கைகளால் தமிழரை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி தற்போதைய பிரச்சினைக்கு வழி சமைத்தனர்.

இந்தச் சீரணிக்க முடியாத உண்மையை எவ்வளவு விரைவில் நாம் ஏற்றுக் கொள்கின்றோமோ, அவ்வளவு விரைவில் ஏற்கனவே பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றைக் காணும் வாய்ப்பு கூடுதலாக இருக்கும்.

முதலில் அதிகாரப் பரவலாக்கல், பின்னர் சுயாட்சி இறுதியில் தனிநாடு கோருவதற்கு தமிழரை இட்டுச் சென்ற சம்பவங்கள் எல்லாம் இடம்பெற்றன.

### முழுக்குற்றமும் சிங்களவர் மீதே

1948 ஆம் ஆண்டின் பின்னர்தான் — அது நாட்டை சிங்கள அரசியல்வாதிகள் ஆளத்தொடங்கிய பின்னர் தான், பிரிட்டிஷார் ஆண்ட போது இவை இடம்பெறவில்லை. ஆகவே முழுக்குற்றமும் சிங்களவராகிய எம் மீது தான் உள்ளது.

தன்னாட்சியென்று சொன்ன மாத்திரத்திலேயே சிங்களத் தேசியத்தைக் காப்பாற்ற என்று தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டவர்களுக்கு "ஹிஸ்ரீரியா" [சூதக] வலிப்பு கண்டுள்ளதில் ஆச்சரியமில்லை.

அதிகாரப் பரவலாக்கலுக்கும் தனிநாட்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டையோ சுயாட்சி, தன்னாட்சி மற்றும் சுதந்திரம் ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டையோ கண்டுபிடிக்கும் தகைமையை முற்றாக இழந்த சக்திகளாக இத்தலைவர்கள் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

1986 வரை அதிகாரப் பரவலாக்கல் என்பது ஒரு கூடுதலான வார்த்தையாகக் கருதப்பட்டு வந்தது. இன்று பேரினவாதிகள் கூட ஏற்றுக் கொள்ளக்கூடிய வார்த்தையாக அதிகாரப் பரவலாக்கல் என்பது அமைந்துள்ளது.

### நிரந்தர இணைப்பு

ஆனாலும் தற்போதுள்ள மாகாணசபை முறைக்கு அப்பால் செல்வது தனிநாட்டை ஏற்பதற்கு ஒப்பாகும் என்றும் கருதப்படுகின்றது.

தொண்டமான் யோசனைகளில் உள்ள மிக முக்கியத்துவமான அம்சம் நிரந்தர இணைப்பு என்பதாகும்.

யாழ்ப்பாணத் தமிழருக்கும் கிழக்கு மாகாணத் தமிழருக்கும் இடையேயான கலாசாரத்தில் பல வேறுபாடுகள் உள்ளன என்று! —

ஆகவே இரண்டு மாகாணங்களையும் நிரந்தரமாக இணைப்பது கிழக்கு மாகாணத் தமிழருக்குப் பாதகமாக முடியும் என்றும் சிங்களப் பேரினவாதிகள் கூறுகின்றனர்.

நல்லது இந்தத் தர்க்கத்தின்படி நாம் பார்க்கப் போனால் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையே கலாசார வேறுபாடுகள் மட்டுமின்றி மொழி மற்றும் மத ரீதியாகவும் வேறுபாடுகள் உள்ளன. ஆகவே தமிழரும் சிங்களவரும் ஒரு நாட்டில் ஒன்றாக வாழ முடியாது!

ஈழம் கோரிக்கைக்கு ஆதரவாகப் பேசுவோருக்கும் இது முக்கியமான அம்சமாக இருக்கின்றது.

யாழ்ப்பாணத் தமிழருக்கும் கிழக்குத் தமிழருக்கும் இடையேயான கலாசார வேறுபாடுகள் கண்டிச் சிங்களவருக்கும் தென்னிலங்கைச் சிங்களவருக்கும் இடையேயுள்ளமை போன்றதே.

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்த் தலைவர்களும், அமைப்புக்களின் தலைவர்களும் நிரந்தர இணைப்பு வேண்டும் என இணங்கியுள்ளனர். இது கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மற்றும் சிங்களவரின் நிலை பற்றிய கேள்வியை எம் முன் எழுப்பியுள்ளது. கிழக்கு மாகாணத்தின் எல்லையை மீண்டும் நிர்ணயிப்பதே இக் கேள்விக்கான இலகுவான பதிலாகும்.

### செல்லுபடியாகாத அரசின் ஆணை

நிரந்தர இணைப்பு நாட்டை சிதறுண்டு போகச் செய்யுமென்று சிங்கள பேரினவாதிகள் கூறுகின்றனர். தமிழ் கெரில்லா இயக்கம் உதயமானதைத் தொடர்ந்து 1970களின் பின்னால் நாடு பிளவுபடுவது ஆரம்பித்தது. இணைப்பு, அதிகாரப் பரவலாக்கல் ஆகியன நிச்சயமாக அதற்குக் காரணமாக அமையவில்லை.

ஒருதசாப்தத்திற்கு மேலாக கொழும்பு அரசாங்கத்தின் ஆணை, வடக்கு - கிழக்கில் செல்லுபடியாகாது இருந்து வருகிறது.

### சிங்களவருக்கு அச்சுறுத்தல்

சிங்கள இனத்தின் காவலர்கள் என்று தம்மை தாமே நியமித்துக் கொண்டவர்கள் எல்லாப் பக்கங்களில் இருந்தும் சிங்களவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் என்று கூறுகின்றார்கள். சிங்களவருக்கான பிரதான அச்சுறுத்தல் எமது சொந்த மனப்பிராந்தியினாலேயே வருகிறது.

ஈழத்தைத் தவிர எல்லாவற்றையும் கொடுக்கத் தான் தயாராகவிருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸா ஒரு முறை சொன்னார். தனிநாடு ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமானால்— நிரந்தர சமாதானத்தை நாம் ஏற்படுத்த வேண்டுமானால் — 'எல்லாவற்றையும்' வழங்குவது தான் எம்முன் உள்ள ஒரே ஒரு வழியாகும். அந்த 'எல்லாவற்றிலும்' சமஷ்டி அரசமைப்பு, பிராந்திய சுயாட்சி, தன்னாட்சி, இணைப்பு ஆகியன இருக்கலாம்.

இந்த 'எல்லாவற்றிற்கும்' சம்மதிப்பதன் மூலம் மட்டுமே விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து தமிழ் மக்களை வெற்றிகரமாகப் பிரித்தெடுக்க முடியும்.

தன்னாட்சி, சுயாட்சி அளவான தீர்வு எதையும் தமிழருக்கு வழங்காது, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. யாழ்ப்பாணம் இராணுவத்திடம் வீழ்ச்சியடைந்தாலும் கூட அது சமாதானத்தை நிச்சயமாகக் கொண்டு வருமென கூறமுடியாது.

வெற்றி கொள்ளும் படையாக இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தினுள் பிரவேசித்தாலும் —

யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படைக்கும் நடந்ததும், தென் லெபனானில் இஸ்ரவேலிய படைக்கு நடந்ததும் தான் இலங்கை இராணுவத்திற்கு நடக்க முடியும். அல்லது வட அயர்லாந்தில் பல தசாப்தங்களாக சிக்குண்டிருக்கும் பிரிட்டிஷாரைப்போன்றும் இலங்கை இராணுவம் சிக்கக் கூடும். (அ-எ)

## ஐ. நா. பிரதிநிதிகள் பங்குபற்றவில்லை

சென்னையில் இருந்து நேற்று முன்தினம் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்த இலங்கைத் தமிழ் அகதிகளை வரவேற்கும் நிகழ்ச்சியில் இலங்கையில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதராலயப் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [த-5]

## நேதாஜிக்கு 'பாரதரத்னா' விருது

இவ்வாண்டு குடியரசு தினத்தை ஒட்டி சுதந்திர போராட்ட வீரர்களான அமரர் சுபாஷ் சந்திரபோஸ் (நேதாஜி), அமரர் மௌலானா அபுல்கலாம் அஸாத் ஆகியோருக்கு பாரதரத்னா விருதை வழங்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

## கூட்டம்

வல்வெட்டித்துறையில் தொடர் விமானத் தாக்குதல் நடந்து ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை இரவு 7-30 மணிக்கு வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் பொதுக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [இ]

## ஜனாதிபதிக்கு புகழாரம் மங்கள முனசிங்க சூட்டினார்

கொழும்பு, ஜன. 24

களுத்துறையில் நடைபெறும் ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் நாடாளுமன்ற எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களான அனில் முனசிங்க, மங்கள முனசிங்க ஆகியோரும் மேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஒஸி அபயகுணசேகராவும் இதில் குறிப்பிடத்தக்கவர்கள்.

அங்கு வைத்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு பேட்டி வழங்கிய மங்கள முனசிங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவைப் பெரிதும் பாராட்டினார் என்று தெரிய வருகிறது.

50 வருடங்களுக்கு மேலாக இருந்து வந்த பிரச்சினைகள் சில நிமிடங்களுக்குள்ளேயே தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்றும்—

பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதி இடம் பெயர் சேவை மகத்தான சேவை ஆற்றி வருவதாகவும் - அவர் கூறினார். [த]

## உலகில் 2 கோடி மக்கள் "எய்ட்ஸ்" நோயால் இறப்பர்

மணிலா, ஜன. 24

2000 ஆவது ஆண்டில் உலகில் இரண்டு கோடி மக்கள் எய்ட்ஸ் நோய் காரணமாக உயிரிழப்பர்.

ஐ. நா. அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் வில்லியம் ட்ரேப்பர் முன்கண்ட எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

எய்ட்ஸ் நோய் ஆசிய நாடுகளில் பெரும் அலை போன்று [illegible] பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

மேலும் லட்சக்கணக்கானோரின் உயிர்களுக்கும் எய்ட்ஸ் நோய் ஆபத்து இருப்பதாகவும் திரு. ட்ரேப்பர் மணிலாவில் நடந்த ஆசிய பிராந்திய அபிவிருத்தித் திட்ட நிபுணர்களின் மாநாட்டில் தெரிவித்தார். அம் மாநாட்டில் 30 ஆசிய நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் கலந்து கொண்டனர். [த-எ]

## றெட்பானா பிரதிநிதிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜன. 24

றெட்பானா அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி யக்கோவ் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவருடன் புதிதாக பதவி ஏற்றுள்ள இலங்கை வதிவிடப் பிரதிநிதியும் வந்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் றெட்பானா அமைப்பு மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களையும், அகதி முகாம்களையும் அவர்கள் பார்வையிட்டனர். [ஒ-3]

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 23

சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சைவ சமய பாடப் பரீட்சை பரிசளிப்பு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன் "திருமுறையின் சிறப்பு" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார். (த)

## படையினரை திசைதிருப்ப புலிகள் தந்திரமாம்

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பும் தமிழ் அகதிகளை எச்சரிக்கை செய்யும் தந்திரோபாயமாகவும், படையினரை திசை திருப்பவுமே விடுதலைப் புலிகள் சலப்பையாறுப் பகுதியில் தாக்குதலை நடத்தினர்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள குச்சவெளி சலைப்பையாறு பகுதியில் கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 20 பேர் கொண்ட இராணுவ அணி ஒன்று முற்றாக அழிந்தது என்பது தெரிந்ததே.

சலப்பையாறில் புலிகள் நடத்திய தாக்குதலில் 20 படையினர் உயிரிழந்தனர் என்ற தகவலையும் கேர்ணல் முனசிங்க செய்தியாளரிடம் கூறினார்.

## மாடுகள் ஏலத்தில்

முல்லை மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் கால்நடை வளர்ப்போரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டு உழவு பழக்கப்பட்ட பல நாம்பன் மாடுகள் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரை கருவேலன் கண்டல் சந்தியில் ஏலத்தில் விற்கப்பட உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உழவு மாடுகளை வாங்க விரும்புவோர் அவற்றை ஏல விற்பனை நடைபெறும் தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே பார்வையிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## மத்தியஸ்தர் சங்கத் தலைவர் பதவியிலிருந்து தமிழர் நீக்கம்

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் பதவியில் இருந்து திரு. ரி. பேரின்பநாயகம் நீக்கப்பட்டிருக்கிறார்.

இச்சங்கத்தில் இணைந்துள்ள 18 மத்தியஸ்தர் சங்கங்களில் பதினான்கு சங்கங்கள் திரு. பேரின்பநாயகத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக்கொண்டு வந்து நிறைவேற்றின.

அதனைத் தொடர்ந்தே அவர் பதவி விலக்கப்பட்டார் என்று "சண்டே ரைம்ஸ்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

## பிரதமர் கலந்து கொள்ளவில்லை

கொழும்பு, ஜன. 24

பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம் பொலவின் கீழ் இயங்கிய விசேட பொலிஸ் செயற்பாட்டுப் பணியகத்தின் முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டி அதன் அலுவலகத்தில் நடைபெற்ற பிரித் ஓதும் நிகழ்ச்சியில் பாதுகாப்புத் துணை அமைச்சரான பிரதமர் டி. பி. விஜேதுங்கா கலந்து கொள்ளவில்லை.

கடந்த 16 ஆம் திகதி அவ்வைபவம் இடம் பெற்றது.

அன்றைய தினம் பொலிஸ்குழு ஒன்று அந்தப் பணியகத்திற்குச் சென்று அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துச் சென்றிருந்தது. இதற்கான காரணத்தை பொலிஸ் தலைமைக் காரியாலயம் வெளியிடவில்லை.

இப்பணியகத்தின் தலைவராகப் பணிபுரிந்த பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல ஓய்வுக்கு முன்னோடியாக கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாராந்தக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 24

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிறு காலை 10.00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்தக் கருத்தரங்கில் கலாகேசரி தம்பித்துரை "எனது கலைத்துறை அனுபவங்கள்" என்ற பொருளில் கருத்துரை வழங்குவார்.

## பாரிய தாக்குதல்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமாதான முயற்சியின் பொருட்டு தென்னிலங்கையில் இருந்து யார் வந்தாலும் நாம் வரவேற்போம். யாரும் வரலாம். எவர் முயற்சி செய்தாலும் நாம் ஆதரவு நல்குவோம்.

ஆனால் பாதுகாப்பு வட்டாரத்தினர், இராணுவத்தினர், படைத் தளபதிகள் கூறி வருவது போல பாரிய இராணுவ நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலம் மக்கள் பாதிப்படைந்தால் சமாதானக் கதவுகளை மூடிவிடுவோம். — என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நல்லெண்ணத் தூதுக்குழுவில் வந்த பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை தென்னிலங்கை மக்களுக்குத் தாம் எடுத்துச் சொல்வதாக உறுதியளித்தனர்.

அரசாங்கமும், தென்னிலங்கைப் பத்திரிகைகளும் செய்து வருவது பொய்ப்பிரசாரம் என்பதனைத் தாங்கள் இப்போது உணர்ந்து கொள்வதாகவும் —

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து தாம் வித்தியாசத்தைப் புரிந்து கொண்டதாகவும்—அவர்கள் மேலும் கூறினார்.

கத்தோலிக்க திருச்சபைகளின் பல்வேறு துறவறச் சபைகளின் முதல்வர்களைக் கொண்ட பதினொரு பேர் தூதுக்குழுவின் சார்பில் அருட்திரு அலெக்சாண்டர், அருட்திரு கிளமன்ற் பெர்ணான்டோ, அருட்திரு நொயல் டயஸ், அருட்செல்வி சிந்தியா இமானுவேல், அருட்செல்வி அனஸ்ரீசியா பெரேரா, அருட்செல்வி கனீஸ் பெர்ணான்டோ ஆகியோர் நேற்றைய பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் திரு. கோ. மகேந்திரராசாவும், கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் பிரசன்னமாக இருந்தனர். [அ-3-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### குமரய்யா தங்கராசா

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்டவரான, இளைப்பாறிய கிளிநொச்சி செயலக நிர்வாக உதவியாளர் குமரய்யா தங்கராசா அவர்கள் நேற்று (23-01-1992) காலை காலமானார். இவர் கிருஷ்ணவேணியின் [ராசா] அன்புக் கணவரும், முகுந்தன் [கொழும்பு], சுகந்தன் [கொழும்பு], அகிலன் [மஹாஜனாக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான குமரய்யா, சேதுப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், கனகரத்தினம், இலட்சுமி ஆகியோரின் சகோதரரும், செல்வராணி, அப்புத்துரை ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான மூளாய் வல்லிபுரம், நாகம்மா தம்பதிகளின் மருமகனும், மங்கையர்க்கரசி [லண்டன்], ஞானாம்பிகை (கனடா), கணேஷானந்தன் [கனடா], கோபாலச்சந்திரன் [கொழும்பு] ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்), திகம்பரலிங்கம் [கனடா], புஷ்பராணி (கனடா), ஹேமமாலினி (கொழும்பு) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மூளாயில் நேற்று மாலை நடைபெற்றன.

தகவல்:
த. அகிலன் (மகன்).

மங்களகிரி,
மூளாய்.

(19445)

### திருமதி தாட்சாயணி சுப்பிரமணியம்

சிவன் கோவிலடி சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி தாட்சாயணி சுப்பிரமணிய ஐயர் 23-01-1992 அதிகாலை 12-00 மணி 5 நிமிட அளவில் சிவபதமெய்தி விட்டார். இவர் கோ. சுப்பிரமணிய ஐயரின் அன்பு மனைவியும், அலமேலு, சோமசுந்தரம், இரங்கநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நீர்வேலி பிக்ஷாடணக் குருக்களின் அன்பு மகளுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 23 - 01 – 1992 அன்று நீர்வேலி பிக்ஷாடணக் குருக்கள் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றன. மிகுதிக் கிரியைகள் 24 - 01 - 1992 வெள்ளிக்கிழமை முற்பகல் தொடக்கம் சிவன்கோவிலடி, சாவகச்சேரி கோ. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. வெங்கட்ராமன்,

(சி/1422)

### திருமதி இ. பரமேஸ்வரி

யாழ்ப்பாணம் 221, கண்டி வீதியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி காலமாகிவிட்டார். இவர் திரு. இ. இராசையா J. P. அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. சபாபதி, திருமதி துரையம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், தயாபரன் (கட்டடத் திணைக்கள ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), பாஸ்கரன் (ஜேர்மனி], சிறீதரன் [நோர்வே] அவர்களின் அன்புத் தாயாரும், புஷ்பராணி, சந்திராதேவி அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் மரணச் சடங்குகள் இன்று வெள்ளிக்கிழமை (24 - 01 - 1992) மாலை 3-30 மணிக்கு 221, கண்டி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. இராசையா J. P.
(கணவன்)

221, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[19450]

### செபஸ்ரியன் பிரான்சிஸ் சைமன்

(Sea Transport Officer- துறைமுக அதிகாரசபை, திருகோணமலை.)

யாழ். கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், ஏழாலை வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான செபஸ்ரியன் பிரான்சிஸ் சைமன் (ராஜா) திருகோணமலையில் 13-01-92 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியோகுப்பிள்ளை செபஸ்ரியன், திருமதி சின்னம்மா செபஸ்ரியன் ஆகியோரின் புத்திரனும், தவமேஸ்வரியின் அன்புக் கணவரும், றெமிஷியா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சிறாணி (உடுவில் மகளிர் கல்லூரி), விக்ரர் (சென். யோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திருமதி டெய்சி தோமஸ், இராசதுரை (இளைப்பாறிய பிரதம லிகிதர், காரியதரிசி- Tecmo/ Fiat TTG இத்தாலி/ சவூதி), திருமதி நீற்றா மரியதாஸ் (முன்னாள் ஆசிரியை), வில்லியம் சற்குணராசா (பிரான்ஸ்), திருமதி குயின் சேவியர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) பாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), குலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி. பரமேஸ்வரி செல்வரத்தினம் (ஆசிரியை), வீரசிங்கம், பசிவங்கம் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 14-01-92 அன்று திருகோணமலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தாய், மனைவி, பிள்ளைகள்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

[5018]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஸ்ரீலங்கா மக்கள் கட்சிக்குள் தீவிர கருத்து வேறுபாடு

சுதந்திரக் கட்சி தலைமையிலான எதிர்க்கட்சிகள் கூட்டணியில் சேருவது குறித்து ஸ்ரீலங்கா மக்கள் கட்சிக்குள் தீவிர கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

எதிர்க் கட்சிகள் கூட்டணி நடத்தும் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளப் போவதாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் வை. பி. டி. சில்வா தெரிவித்துள்ளார்.

தமது கட்சித் தலைவரான ஒஸி அபயகுணசேகராவைக் கண்டித்தும் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

இதே வேளை - தமது பொதுச் செயலாளர் வை. பி. டி. சில்வாவைக் கண்டித்து திரு. ஒஸி அபயகுணசேகராவும் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

திரு. சில்வாவின் செயல் துரோகத்தனமானது என்று அவர் கூறியிருக்கிறார்.

[த-எ]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை.

### ஊனமுற்றோருக்கான தொழிற் பயிற்சி

கண், காது, கை, கால் ஆகியவற்றில் குறைபாடு உள்ளவர்களுக்கும், தொழிற் பயிற்சி அளித்து அவர்களை தாமே தங்களில் தங்கி வாழக் கூடிய வழியை உருவாக்கும் பொருட்டு ஒரு கலந்துரையாடல் எமது பணிமனையில் 26-01-1992 பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி குறைபாடுகள் உள்ளோர் வருகை தந்து தாங்கள் விரும்பும் தொழிற் பயிற்சி முறைகளை முன் வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தொழிற்பயிற்சிகள் 03-02-1992 இல் ஆரம்பிக்கப்படும்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். 22-1-92

[சி/1356]

## நன்றி நவிலல்

### வ. கந்தசாமி (சீனா கந்தசாமி)
(மாதகல்)

மாதகல் வ. கந்தசாமி (சீனா கந்தசாமி) அவர்களின் மரணச் செய்தி அறிந்து, ஈமக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும், எமது துயரில் பங்குகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் மற்றும் பலவிதங்களில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்:
அன்பு மனைவியும், மகனும்.

மாதகல் வடக்கு,
மாதகல்.

[19446]

## மகா கும்பாபிஷேகம்

சுழிபுரம் மேற்கு
கதிர் வேலாயுத சுவாமி கோயில்
(பெரியதம்பிரான்)

### மகா கும்பாபிஷேகம்

இன்று **24-1-1992** காலை **8-15** மணி தொடக்கம் **9-30** மணி வரை உள்ள சுபவேளையில் நடைபெறும்.

துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை வழங்குவார்.

கந்தபுராண ஏட்டுப்பிரதியைக் கொண்ட பழம் பெரும்பதியாகிய இக்கோயிலில் 1956 ஆம் ஆண்டு முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

"வேலுண்டு பயமில்லை" [19455]

## அறிவித்தல்

தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்
தலைமைச் செயலகம், தமிழீழம்.

யாழ். மாவட்டத்தில் உள்ள இணக்க மன்றுகள் / மேன்முறையீட்டு மன்றுகள் / ஆரம்ப நீதி மன்றுகளின் தீர்வுகளை இணக்கமாக ஏற்றுக்கொண்டு இதுவரை காலமும் நிறைவேற்றாது உள்ள கட்சிக்காரர்களுக்கும், மேற்படி மன்றுகளில் விசாரணைகளுக்கு சமுகமளிக்காதுள்ள கட்சிக்காரர்களுக்கும் எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

1. எனவே இணக்கத் தீர்வுகளை நிறைவேற்றாது உள்ள கட்சிக்காரர்கள் 1992-01-31 ஆம் திகதிக்கு முன் குறித்த மன்றுகளுக்குச் சென்று இணக்கத் தீர்வை நிறைவேற்ற வேண்டும். அல்லது அவ்வாறு நிறைவேற்ற முடியாமைக்குரிய காரணத்தை எழுத்தில் எழுதி குறித்த மன்றில் ஒப்படைத்தல் வேண்டும்.
2. குறித்த பிணக்குகளின் முறையீட்டாளர்கள் குறித்த மன்றுகளுக்குச் சென்று 1992-01-31 ஆம் திகதிக்கு முன் இணக்கத் தீர்வுப் பிரதியை செயலாளர் / பதிவாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
3. யாழ். மாவட்டத்திலுள்ள இணக்க மன்றுகளில் பிணக்குகள் தாக்கல் செய்து கொள்வதை 1992-02-01 ஆம் திகதியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

பொறுப்பாளர்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
தலைமைச் செயலகம், தமிழீழம்.

(19451)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம், ஜன. 24

பாடசாலை மாணவர்கள் இரவு நேரத்தில் கல்வி பயில வசதியாக உதவி அரச அதிபர் பிரிவு ஒவ்வொன்றிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக்கு ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்க செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை நடவடிக்கை எடுத்துள்ளது.

முதல் கட்டமாக யாழ்ப்பாணம், கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள இரு பாடசாலைகளுக்கு ஜெனரேட்டர் மூலம் மின்வசதி வழங்கப்படவிருக்கிறது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்க் கிளையின் அனுசரணையுடன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மின்சாரம் பெற உள்ளது.

நாளை 25 ஆம் திகதி முதல் மாலை 6-30 மணி தொடக்கம் இரவு 9 30 மணி வரை மின்சாரம் வழங்கப்படும்.

[இ-ந-3]

## தோட்டப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னார்.

மலைநாட்டில் இடம்பெறும் பயங்கரவாத; நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த தடுப்பு நடவடிக்கைகளை அரசு உடனே எடுக்கவேண்டும் என்று சுதந்திரக்கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி இவ்விவாதத்தில் பேசும்போது சொன்னார்.

இனப்பிரச்சினைக்கு எந்த விதமான தீர்வும் சாத்தியமில்லை என்ற காரணத்தினாலேயே வடக்கிலும், கிழக்கிலும் அவசரகாலச் சட்ட விதிகள் தேவைப்படுவதாக சுதந்திரக் கட்சி எம். பி. நிமால் சிறிபால டீ சில்வா சொன்னார்.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் இருக்குமாயின் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்றும், குற்றமற்றவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் ஐக்கிய சோஷலிச அணி எம். பி. அத்தாவுட செனவிரத்தினா தெரிவித்தார்.

[த-எ]

சுழிபுரம் மேற்கு
கதிர் வேலாயுத சுவாமி
கோயிலின்
மகா கும்பாபிஷேகம்
சிறப்புற இறைவனை
இறைஞ்சுகிறோம்.

சுழிபுரம் மேற்கு
பாரதி கலை மன்றத்தினர்
[19456]

புதிய
உயர் கல்லூரி
New College
of High Studies
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L 91** பகல் நேர
வினா - விடை
வகுப்பு
புதிய பிரிவு
இந்துநாகரிகம்
காலை 9-00 மணி.
திருமதி
S. அருள்நங்கை
பொருளியல்
12-00 — 2-00
ஆரம்பம்:
28 - 01 - 1992
★ மிகுதி ஏனைய பாடங்களும் நடைபெறுகின்றன.
[சி-1423]

## அச்சமின்றி வரலாம் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜன. 24

இலங்கைத் தமிழ் அகதிகள் எந்த அச்சமும் இன்றி தாயகம் திரும்பி வரவேண்டும்.

— இப்படி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா தெரிவித்தார்.

திருகோணமலை சீனக்குடாத் துறைமுகத்தில் தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகளில் முதல் தொகுதியினரை வரவேற்கும் வைபவத்தில் கலந்து கொண்ட பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். [இ-எ]

## கிறிஸ்டின் பேர்னாட் கொழும்பு வருகிறார்

கொழும்பு, ஜன. 24

உலகில் முதலாவது இருதய மாற்று சத்திர சிகிச்சையைச் செய்த தென் ஆபிரிக்க இருதய மாற்று சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர் கிறிஸ்டின் பேர்னாட் இம் மாத இறுதியில் கொழும்பு வருகிறார்.

இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவுள்ள றோட்டரி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் வருகிறார்.

இந்திய அரசியல்வாதியான திருமதி மேனகா காந்தியும் இம் மாநாட்டில் பங்குபற்றவிருக்கிறார்.

(த-எ)

## மரண அறிவித்தல்கள்

### குழந்தைவேலு புண்ணியமூர்த்தி

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு. குழந்தைவேலு புண்ணியமூர்த்தி [இளைப்பாறிய ஆசிரியர் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி] 23-1-92 இல் காலமானார். அன்னார் மாவிட்டபுரம் காலஞ்சென்ற குழந்தைவேலு தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், இணுவில் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் மருமகனும், மாரிமுத்துவின் கணவரும், கண்ணபிரான் [வலி. தென் மேற்கு பிரதேச சபை] ஜானகி, பாகீரதி [கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்], கலைச்செல்வி [யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடம்] ஆகியோரின் தந்தையாரும் ஜயந்தி இரகுநாதன் [கட்டிடத் திணைக்களம் யாழ்ப்பாணம்], கணேசதுரை [இளைப்பாறிய அதிபர், பெரியகல்லாறு] ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-1-92 ஆம் திகதி காலை 10 மணிக்கு மருதனாமடம் உடுவில் வீதியிலுள்ள காலஞ்சென்ற சபா சின்னத்தம்பியின் இல்லத்தில் நடைபெற்று பூவோடை மயானத்துக்கு தகனக்கிரியைகட்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பு. கண்ணபிரான்
[மகன்]

மருதனாமடம்,
உடுவில்.

[19453]

### திருமதி நன்னித்தம்பி சிவகாமசுந்தரி
[சாத்திரம்மா]

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சாத்திரம்மா என அழைக்கப்படும் சிவகாமசுந்தரி அவர்கள் 23-01-1992 அன்று காலை 9 மணிக்கு சிவபதம் அடைந்து விட்டார். அன்னாரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் 23-01-1992 இல் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் மயானத்தில் மாலை 5 மணிக்கு தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்
குடும்பத்தினர்.

சிவகாமி அம்மன்
கோவிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

[19454]

### திருமதி அந்தோனியாப்பிள்ளை

திருமதி அந்தோனியாப்பிள்ளை நேற்றுக் காலமானார். இவர் அந்தோனிப்பிள்ளை [ஓய்வு பெற்ற ஆண் தாதி, மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை]யின் அன்பு மனைவியும், மரியாம்பிள்ளை (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), தொம்மைக்குட்டி (ஓய்வு பெற்ற சங்கீத, நடன ஆசிரியர்), செபநாயகம் (ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் மன்னார்), பேரின்பநாதன் (D.S.O., C.T.B), செபமணி (ஆசிரியர் மானிப்பாய் இந்துக் கல்லூரி), திருமதி மரியதாஸ் (ஓய்வு பெற்ற அதிபர்), திருமதி ராஜரட்னம், திருமதி இருதயநாதன் [அதிபர் சென்ற் ஆன்ஸ் மானிப்பாய்] ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார். இவரின் இறுதி ஆராதனை இன்று பி.ப. 3-30 மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் நல்லடக்கத்திற்காக கல்லுண்டாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
A. C. செபநாயகம்
(மகன்)

"தாயகம்"
நவாலி.

(19457)